மதுரை பழங்காநத்தம் இணைப் பதிவாளர் அலுவலகம் முன் தமிழ்நாடு அரசு கூட்டுறவுத் துறை ஊழியர் சங்கம் சார்பில் நடந்த ஆர்ப்பாட்டத்தில் பங்கேற்றோர். படம்: எஸ்.கிருஷ்ணமூர்த்தி

கூட்டுறவு துறை ஊழியர் சங்கத்தினர் ஆர்ப்பாட்டம்

● மதுரை

தமிழ்நாடு அரசு கூட்டுறவுத் துறை ஊழியர் சங்கம் சார்பில், மதுரை பழங்காநத்தத்தில் உள்ள இணைப் பதிவாளர் அலுவலகம் முன் ஆர்ப்பாட்டம் நடைபெற்றது.

மாவட்டத் தலைவர் சுந்தரமூர்த்தி தலைமை வகித்தார். மாவட்டச் செயலாளர் சீனியப்பா பேசினார். மாநில செயலாளர் சந்திரபோஸ் கண்டன உரையாற்றினார். முதுநிலை ஆய்வாளராகப் பதவி உயர்வு பெற்றவர்களுக்கு, மாவட்ட ஒதுக்கீட்டு ஆணை வழங்கப்பட்டுள்ள 33 ஊழியர்களில் 27 ஊழியர்களுக்கு பணிபுரியும் மாவட்டத்தில் காலிப் பணியிடங்கள் இருக்கும் நிலையில், வெளிமாவட்டங்களுக்கு பணி ஒதுக்கீடு வழங்கியதை ரத்து செய்ய வேண்டும். பதவி உயர்வு பெற்றவர்களுக்கு அவர்கள் பணிபுரியும் மாவட்டத்திலேயே அதிக காலிப் பணியிடங்கள் உள்ள நிலையில் அங்கேயே பணி அமர்வு ஆணை வழங்க ஆவன செய்ய வேண்டும் என வலியுறுத்தினர்.

மாநில பொதுச் செயலாளர் நவநீதகிருஷ்ணன் நிறைவுரையாற்றினார். மாவட்டப் பொருளாளர் தீனதயாளன் நன்றி கூறினார்.

கஞ்சா வழக்கில் ஒருவருக்கு 10 ஆண்டுகள் சிறை

● மதுரை

கஞ்சா வழக்கில் கைதான நபருக்கு 10 ஆண்டுகள் சிறை தண்டனை விதிக்கப்பட்டது.

தேனி மாவட்ட போதைப் பொருள் தடுப்பு நுண்ணறிவுப்பிரிவு போலீஸார் 26.10.2021-ல் கண்ணூத்து ஓடை, க.புதுப்பட்டி சாலையில் 24 கிலோ கஞ்சாவுடன் கம்பம் ஈஸ்வரன் (50) என்பவரை கைது செய்தனர்.

இந்த வழக்கு விசாரணை மதுரை முதலாவது கூடுதல் போதைப் பொருள் தடுப்பு சிறப்பு நீதிமன்றத்தில் நடைபெற்றது. ஈஸ்வரனுக்கு 10 ஆண்டுகள் சிறைத் தண்டனை, ரூ.1 லட்சம் அபராதம் விதித்து நீதிபதி ஏ.எஸ்.ஹரிஹரகுமார் தீர்ப்பளித்தார்.

பெண் குழந்தையுடன் தாய் தற்கொலை

● மதுரை

மதுரை கோச்சடை பிஎஸ்எம் நகரைச் சேர்ந்த முத்துகார்த்திக் மனைவி முருக பூபதி (30). சர்க்கரை நோய் பாதிப்பு காரணமாக விரக்தியில் இருந்து வந்தார். இந்நிலையில் மன உளைச்சலில் நேற்று காலை தனது 2 வயது பெண் குழந்தையான முத்துமீனாவுடன் உடலில் தீப்பற்றக்கூடிய திரவத்தை ஊற்றி தீ வைத்துக் கொண்டார். மருத்துவமனையில் அனுமதிக்கப்பட்டதில் தாயும், மகளும் சிகிச்சை பலனின்றி உயிரிழந்தனர். எஸ்எஸ்.காலனி போலீஸார் விசாரிக்கின்றனர்.

மனைவியை கொன்ற கணவன் கைது

● திண்டுக்கல்

திண்டுக்கல் பெரியார் நகர் பகுதியை சேர்ந்தவர் முத்தையா (63). வெல்டிங் பட்டறை நடத்தி வருகிறார். இவரது மனைவி லட்சுமி (57). நேற்று முன்தினம் இரவு தகராறு முற்றியதில் முத்தையா, தனது மனைவி லட்சுமியை தாக்கியதுடன் சுவரில் தலையை மோதச் செய்தார். இதில் படுகாயமடைந்த லட்சுமி உயிரிழந்தார். திண்டுக்கல் நகர் தெற்கு போலீஸார் கொலை வழக்குப் பதிவு செய்து, முத்தையாவை கைது செய்தனர்.

சர்வதேச மகளிர் தினத்தையொட்டி உயர் நீதிமன்ற கிளை மதுரை வழக்கறிஞர்கள் சங்கம் சார்பில் பெண்களுக்கான மருத்துவ முகாமை தொடங்கி வைத்து மருத்துவ பரிசோதனை செய்து கொண்டார் நீதிபதி பவானி சுப்பராயன். உடன் எம்பிஏ தலைவர் எம்.கே.சுரேஷ், பொதுச் செயலாளர் ஆர்.வெங்கடேசன்.

நகரில் நடப்பவை

மதுரை

- மகளிர் தின விழா, மகளிர் மன்றம், ச.வெள்ளைச்சாமி நாடார் கல்லூரி, காலை 10.
- சிவராத்திரி நாட்டியாஞ்சலி 2-ம் நாள், தமிழ் இசைச் சங்கம், ராஜாமுத்தையா மன்றம், காலை 9.
- மகா சிவராத்திரி உற்சவம், சின்மயா தபோவனம், புல்லூத்து சர்வேஸ்வரர் ஆலயம், மாலை 4.
- மகளிர் தின விழா சிறப்பு பட்டிமன்றம், மகளிர் மேம்பாட்டுக்குழு, மீனாட்சி அரசு மகளிர் கல்லூரி, காலை 10.
- சர்வதேச மகளிர் தின விழா, தானம் அறக்கட்டளை, மைய அலுவலகம், காலை 10.
- நூலகத் திறப்பு விழா, ஊராட்சி ஒன்றிய நடுநிலைப் பள்ளி, எல்கேபி நகர் காலை 9.
- இலவச பயிற்சி கருத்தரங்கம், மடீட்சியா வர்த்தக தகவல் மையம், மாலை 4.30.

மாண்புமிகு இரண்டாவது கூடுதல் சார்பு நீதிமன்றம், மதுரை

O.S.No: 1127of 2023

பேங்க் ஆஃப் பரோடா, அதன் முதன்மை மேலாளர் மூலம், சொக்கிகுளம் கிளை ... வாதி

...எதிரிடை...

1. திரு.M.G.சரத்குமார், த/பெ. திரு.M.கணேஷ், எண்: E-313, போலீஸ் குவார்ட்ரஸ், விஸ்வநாதபுரம், மதுரை-625002.
2. திரு.M.கணேஷ், எண்: E-313, போலீஸ் குவார்ட்ரஸ், விஸ்வநாதபுரம், மதுரை-625002. ... பிரதிவாதிகள்

அறிவிப்பு

சமூகம் நீதிமன்றத்தில் மேற்படி வழக்கில் வாதி வங்கிக்கு பிரதிவாதிகள் செலுத்த வேண்டிய கடன் தொகை ரூ.8,38,656.94யும் பின் வட்டியையும் சேர்த்து வசூல் செய்திட வேண்டி, தங்கள் மீது மேற்படி நீதிமன்றத்தில் தாவா வழக்கு தாக்கல் செய்யப்பட்டுள்ளது. அவ்வழக்கில் மேற்படி பிரதிவாதிகள் நேரில் ஆஜராவதற்கு 12.03.2024ம் தேதியன்று வாய்தா ஏற்பட்டு உள்ளது. ஆதலால் மேற்படி சமூகம் நீதிமன்றத்தில், மேற்படி தேதியில் காலை 10.30 மணிக்கு தாங்கள் நேரிலோ அல்லது வழக்கறிஞர் மூலமாகவோ ஆஜராக வேண்டியது, தவறினால் மேற்படி வழக்கு தங்கள் மீது ஒருதலைபட்சமாக தீர்மானிக்கப்படும் என இதன் மூலம் அறிவிக்கலாயிற்று.

வழக்கறிஞர், வீ.காசிராஜன், மதுரை
இடம்: மதுரை ; நாள்: 05.03.2024

தமிழ்நாடு மின் உற்பத்தி மற்றும் பகிர்மான கழகம்
ஒப்பந்தப்புள்ளி ரத்து அறிக்கை

வ.எண்	விவரம்
1	உலகளாவிய மின்னணு ஒப்பந்த புள்ளி மறுநிலை ஏலத்துடன் (e-tender cum e-reverse auction) அடிப்படையின் கீழ் இரண்டு ஆண்டுகளுக்கு 2024-25 மற்றும் 2025-26 வெளிநாட்டு நீராவி நிலக்கரி 5000 GAR எந்த ஒரு வெளிநாட்டில் இருந்தும் இறக்குமதி செய்து காமராஜர் துறைமுகம்/ எண்ணூர், காரைக்கால் துறைமுகம் வாயிலாக வழங்குவதற்காக இந்து தமிழ் திசை 07.03.2024 நாளிதழில் கோரப்பட்ட ஒப்பந்தப்புள்ளி எண்: நிலக்கரி-155, நாள்: 06.03.2024 ரத்து செய்யப்படுகிறது.

செ.ம.தொ.இ/1457/ஒப்பந்தப்புள்ளி/2024 தலைமை பொறியாளர் / இயந்திரவியல் / நிலக்கரி, த.மி.உ.ப.க., சென்னை-02

மாண்புமிகு முதலாவது கூடுதல் சார்பு நீதிமன்றம், மதுரை

O.S.No: 1485 of 2023

பஞ்சாப் நேஷனல் வங்கி அதன் முதன்மை மேலாளர் மூலம், மேற்கு மாசி வீதி கிளை ... வாதி

...எதிரிடை...

1. திரு.P.சரவணகுமார், த/பெ. திரு.M.பாண்டி, கதவு எண்: 71, பாக்கியம் காம்பவுண்ட், ஜீவா தெரு, செல்லூர், மதுரை-625002
2. திரு.M.பாண்டி, த/பெ. திரு.முத்துக்கருப்பன், கதவு எண்: 71, பாக்கியம் காம்பவுண்ட், ஜீவா தெரு, செல்லூர், மதுரை-625002
3. திரு.K.K.மகாதேவன், கதவு எண்: 4/302, பொன்னி தெரு, AR லைன் தபால், மதுரை-625014.
4. திருமதி.P.முத்துலெட்சுமி, க/பெ. திரு.M.பாண்டி, கதவு எண்: 71, பாக்கியம் காம்பவுண்ட், ஜீவா தெரு, செல்லூர், மதுரை-625002 ... பிரதிவாதிகள்

அறிவிப்பு

சமூகம் நீதிமன்றத்தில் மேற்படி வழக்கில் வாதி வங்கிக்கு பிரதிவாதிகள் செலுத்த வேண்டிய கடன் தொகை ரூ.7,94,663.32யும் பின் வட்டியையும் சேர்த்து வசூல் செய்திட வேண்டி, தங்கள் மீது மேற்படி நீதிமன்றத்தில் தாவா வழக்கு தாக்கல் செய்யப்பட்டுள்ளது. அவ்வழக்கில் மேற்படி பிரதிவாதிகள் நேரில் ஆஜராவதற்கு 22.03.2024ம் தேதியன்று வாய்தா ஏற்பட்டு உள்ளது. ஆதலால் மேற்படி சமூகம் நீதிமன்றத்தில், மேற்படி தேதியில் காலை 10.30 மணிக்கு தாங்கள் நேரிலோ அல்லது வழக்கறிஞர் மூலமாகவோ ஆஜராக வேண்டியது, தவறினால் மேற்படி வழக்கு தங்கள் மீது ஒருதலைபட்சமாக தீர்மானிக்கப்படும் என இதன் மூலம் அறிவிக்கலாயிற்று.

வழக்கறிஞர், வீ.காசிராஜன், மதுரை
இடம்: மதுரை ; நாள்: 26.02.2024

தமிழ்நாடு அரசு
புதுக்கோட்டை நகராட்சி
AMRUT 2.0 2023-2024
மின்னணு ஒப்பந்தப்புள்ளி அழைப்பு (இரு உறை முறை)

ந.க.எண்.367/2024/இ1 நாள்: 07.03.2024

புதுக்கோட்டை நகராட்சியில் AMRUT 2.0 2023-2024 திட்டத்தின் கீழ் அம்மையாப்பட்டி நீரேற்று நிலையத்திலிருந்து புதுக்கோட்டை நகர பகுதிக்கு 24x7 மணி நேரமும் குடிநீர் வழங்கும் பணிக்கு புதுக்கோட்டை நகராட்சி ஆணையாளர் அவர்களால் ஒப்பந்தப்புள்ளிகள் வரவேற்கப்படுகின்றன.

1. பணியின் மதிப்பு ரூ. 2359.00 இலட்சம் 2. முன்வைப்புத் தொகை ரூ. 23,59,000/-
3. ஒப்பந்தப்புள்ளி நமூனாவினை http://tntenders.gov.in என்ற இணைய தள முகவரியிலிருந்து ஒப்பந்தப்புள்ளி குறித்த முழு விபரங்களும் பெறலாம்.
4. அ. ஒப்பந்தப்புள்ளிகள் படிவம் பதிவிறக்கம் செய்தல் : 15.03.2024 காலை 11.00 மணி முதல்
ஆ. ஒப்பந்தப்புள்ளி முன்கலந்தாய்வு கூட்டம் : 18.03.2024 காலை 11.00 மணி
இ. ஒப்பந்தப்புள்ளி சமர்ப்பித்தல் : 15.04.2024 மாலை 3.00 மணி வரை
ஈ. தொழில்நுட்ப ஒப்புதப்புள்ளிகள் திறத்தல் : 15.04.2024 மாலை 3.30 மணி
5. ஒப்பந்தப்புள்ளி அட்டவணையில் ஏதேனும் திருத்தங்கள் / மாறுதல்கள் இருப்பின் மேல் குறிப்பிட்ட இணையதளத்தில் மட்டுமே வெளியிடப்படும். இதர விபரங்களை அலுவலக நேரத்தில் நகராட்சி அலுவலக பொறியியல் பிரிவில் கேட்டு தெரிந்துக்கொள்ளலாம்.

ஆணையர், புதுக்கோட்டை நகராட்சி.

செ.ம.தொ.இ / 1454 / ஒப்பந்தப்புள்ளி / 2024

பெருநகர சென்னை மாநகராட்சி
மண்டலம் - 9 ம.அ.9.ந.க.எண்.இ1/1500/2024

குறுகிய கால மின்னணு ஒப்பந்தப்புள்ளி கோரும் அறிக்கை
கீழ்கண்ட பணிகளுக்கு மின்னணு ஒப்பம் கோரப்படுகிறது

பணியின் விவரம்	பணியின் மதிப்பு (ரூ.இலட்சங்களில்)	முன் வைப்புத் தொகை	பணி செய்ய தகுதியான ஒப்பந்ததாரரின் பதிவு நிலை
ம.அ.9.ந.க.எண்.இ1/1500/2024 சட்ட மன்ற உறுப்பினர் தொகுதி மேம்பாட்டு நிதியின் கீழ் மண்டலம் - 9, பகுதி - 27, வார்டு எண்.114ல் லாக் நகரில் பல்நோக்கு கட்டிடம் கட்டும் பணி	ரூ.83.11/- இலட்சங்கள்	ரூ.83,200/-	முதல் வகுப்பு

ஒப்பப் படிவம் சமர்ப்பிக்க கடைசி நாள் மற்றும் நேரம் 11.03.2024 மாலை 03.00 மணி
ஒப்பப் படிவங்கள் http://tntenders.gov.in என்ற இணையதளம் மூலம் தெரிந்துக் கொள்ளலாம்.
இணையதளம் மூலம் திறக்கப்படும் நாள் மற்றும் நேரம் 12.03.2024 மாலை 3.30 மணி

மா.வ.அ / மண்டல அலுவலர் மண்டலம்- 9

செ.ம.தொ.இ / 1465 / ஒப்பந்தப்புள்ளி / 2024

பெருநகர சென்னை மாநகராட்சி
மழைநீர் வடிகால் துறை ம.நீ.வ.து.ந.க.எண்.பி1/4442/2017

கீழ்கண்ட பணிகளுக்கு மின்னணு ஒப்பம் இரண்டு உறை முறையில் கோரப்படுகிறது.

ம.நீ.வ.து.ந.க.எண்.பி1/4442/2017
பெருநகர சென்னை மாநகராட்சி, மழைநீர் வடிகால் துறையின் மூலம் ஆசிய வளர்ச்சி வங்கி (Asian Development Bank) நிதியின் கீழ் கொசஸ்தலையாறு வடிநிலப்பகுதியில் கடப்பாக்கம் ஏரியின் சுற்றுச்சூழல் அமைப்பு மற்றும் மறுசீரமைப்பு பணி.

ஒப்ப பணிக்காலம் 24 மாதம் / ஒப்புள்ளிக்கான முன்வைப்புத் தொகை ரூ.52.76 லட்சம்
ஒப்ப திறப்பு முன் கூட்டம் (pre-Bid meeting) 27.03.2024 அன்று மாலை 3.00 மணிக்கு கண்காணிப்பு பொறியாளர், பெருநகர சென்னை மாநகராட்சி, மழைநீர் வடிகால் துறை, அம்மா மாளிகை, சென்னை - 600 003-ல் நடைபெறும்
நிறைவு செய்யப்பட்ட ஒப்பந்தபுள்ளிகள் பெறப்படுவதற்கான கடைசி நாள் : 26.04.2024, மாலை 3.00 மணிக்குள் https://tntenders.gov.in என்ற இணையதளத்தில் Digital Signature card/e.token பயன்படுத்தி ஒப்பம் சமர்பிக்க வேண்டும்.
பெறப்பட்ட ஒப்பந்தபுள்ளிகள் திறக்கப்படும் இடமும், நாளும், நேரமும் : 26.04.2024 மாலை 3.00 மணிக்குள் https://tntenders.gov.in என்ற வலை தளத்திலிருந்து பெறப்படும் ஒப்பந்தபுள்ளிகள் வருகை தரும் ஒப்பந்ததாரரின் முன்னிலையில் அன்றே 3.30 மணியளவில் கணினி மூலம் திறக்கப்படும்.

செ.ம.தொ.இ / 1469 / ஒப்பந்தப்புள்ளி / 2024 கண்காணிப்பு பொறியாளர் / மநீவது

மாண்புமிகு முதலாவது கூடுதல் சார்பு நீதிமன்றம், மதுரை

O.S.No: 904 of 2023

பேங்க் ஆஃப் பரோடா, அதன் தலைமை மேலாளர் மூலம், சொக்கிகுளம் கிளை, 1/1, PT ராஜன் ரோடு, பி.பி.குளம், சின்ன சொக்கிகுளம், மதுரை-625002. ... வாதி

...எதிரிடை...

1. செல்வி.H.யோகேஸ்வரி, த/பெ. திரு.S.ஹரிசிவநாதன், எண்: 12/26C, புது எண்: 32, சிரஞ்சீவிநாதன் இல்லம், பாண்டியன் 2வது தெரு, பி.பி.குளம், மதுரை-625002.
2. திரு.S.ஹரிசிவநாதன், எண்: 12/26C, புது எண்: 32, சிரஞ்சீவிநாதன் இல்லம், பாண்டியன் 2வது தெரு, பி.பி.குளம், மதுரை-625002.
3. திருமதி.H.தேன்மொழி, க/பெ. திரு.S.ஹரிசிவநாதன், எண்: 12/26C, புது எண்: 32, சிரஞ்சீவிநாதன் இல்லம், பாண்டியன் 2வது தெரு, பி.பி.குளம், மதுரை-625002. ... பிரதிவாதிகள்

அறிவிப்பு

சமூகம் நீதிமன்றத்தில் மேற்படி வழக்கில் வாதி வங்கிக்கு பிரதிவாதிகள் செலுத்த வேண்டிய கடன் தொகை ரூ.2,57,655.06யும் பின் வட்டியையும் சேர்த்து வசூல் செய்திட வேண்டி, தங்கள் மீது மேற்படி நீதிமன்றத்தில் தாவா வழக்கு தாக்கல் செய்யப்பட்டுள்ளது. அவ்வழக்கில் மேற்படி பிரதிவாதிகள் நேரில் ஆஜராவதற்கு 19.03.2024ம் தேதியன்று வாய்தா ஏற்பட்டு உள்ளது. ஆதலால் மேற்படி சமூகம் நீதிமன்றத்தில், மேற்படி தேதியில் காலை 10.30 மணிக்கு தாங்கள் நேரிலோ அல்லது வழக்கறிஞர் மூலமாகவோ ஆஜராக வேண்டியது, தவறினால் மேற்படி வழக்கு தங்கள் மீது ஒருதலைபட்சமாக தீர்மானிக்கப்படும் என இதன் மூலம் அறிவிக்கலாயிற்று.

வழக்கறிஞர், வீ.காசிராஜன், மதுரை
இடம்: மதுரை ; நாள்: 14.02.2024

கனரா வங்கி, சொத்து மீட்பு மேலாண்மை கிளை, செயின்ட் மேரிஸ் வளாகம், வட்ட அலுவலகம், முதல் தளம், கீழ் வெளி வீதி, மதுரை-625001.

சுவாதீன அறிவிப்பு - [பிரிவு 13(4)] [விதி 8(1)] (அசையா சொத்துக்களுக்கானது)

பிணைக்காப்பு, நிதிச் சொத்து மறுசீரமைப்பு மற்றும் பிணைக்காப்பு செயலாக்கச் சட்டம், 2002 மற்றும் பிணைக்காப்பு (செயலாக்கம்) விதிகள் 2002-ன் கீழ் அதிகாரம் பெற்ற அதிகாரியாக நியமிக்கப்பட்டவரான கீழே கையொப்பமிட்ட கனரா வங்கியின் அங்கீகாரம் பெற்ற அதிகாரி மூலம் (சட்டம் 54, 2002) பிரிவு 13(12) விதி 3-ன் கீழ் 27.12.2023 தேதியிட்ட கோரிக்கை அறிவிப்பில் (Demand Notice) குறிப்பிடப்பட்ட கடன் நிலுவைத் தொகை ரூ.2,27,88,471.70 (ரூபாய் இரண்டு கோடியே இருபத்தேழு இலட்சத்து எண்பத்தெட்டாயிரத்து நாநூற்று எழுபத்தொன்று மற்றும் பைசா எழுபது மட்டும்)-ஐ அறிவிப்பு பெற்ற 60 நாட்களுக்குள் திருப்பிச் செலுத்துமாறு கடன்தாரரான : திரு.S.ராமர், த/பெ.சௌடையன் செட்டியார், கதவு எண்.29/15, சின்ன சௌடம்மன் கோவில் தெரு, போடிநாயக்கனூர்-625528, தேனி மாவட்டம், திருமதி.S.ஷர்மிளா, க/பெ.திரு.S.ராமர், கதவு எண்.29/15, சின்ன சௌடம்மன் கோவில் தெரு, போடிநாயக்கனூர்-625528, தேனி மாவட்டம் ஆகிய முகவரிதாரர்களுக்கு அனுப்பப்பட்டது. கடன் பெற்ற நபர்கள் வங்கிக்கு செலுத்த வேண்டிய கடன் தொகையை செலுத்த தவறியதால், குறிப்பாக கடன் பெற்ற நபருக்கும், பொதுமக்களுக்கும் இதன் மூலம் அறிவிப்பது என்ன என்றால், மேற்படி சட்டம் 13(4) பிரிவின் கீழ் கொடுக்கப்பட்டுள்ள அதிகாரத்தின் படியும், மேற்படி சட்ட விதி எண் 8-ன் படியும் கீழே விவரிக்கப்பட்டுள்ள சொத்துக்களை 06.03.2024 அன்று அங்கீகாரம் பெற்ற அதிகாரி சுவாதீனம் எடுத்துள்ளார். இது முதற்கொண்டு கடன் பெற்றவர்கள் மற்றும் பொது மக்கள் கீழ்க்காணும் அடமான அசையா சொத்துக்களில் எந்தவிதமான வில்லங்கங்களும் ஏற்படுத்தக் கூடாது என்றும் அவ்வாறு ஏற்படுத்தினால் அது கனரா வங்கி, சொத்து மீட்பு மேலாண்மை கிளை, மதுரை-க்கு 29.02.2024 தேதிப்படி செலுத்த வேண்டிய கடன் நிலுவைத் தொகை ரூ.2,38,23,583.70 (ரூபாய் இரண்டு கோடியே முப்பத்தெட்டு லட்சத்து இருபத்து மூன்றாயிரத்து ஐநூற்று எண்பத்து மூன்று மற்றும் பைசா எழுபது மட்டும்) இதற்கு வட்டி, பிற செலவினங்களுடன் நடப்பு தேதி வரையிலான கடன் நிலுவைத் தொகையை செலுத்துவதற்கு கட்டுப்பட்டதாகும் என்று இதன் மூலம் தெரிவித்துக் கொள்கிறோம். சர்ஃபாசி சட்டம் 2002, சார்பிரிவு 8, பிரிவு 13-ன் கீழ் கூறியுள்ள கால அவகாசத்திற்குள் கடன் நிலுவைத் தொகையை செலுத்துவதற்கு சம்பந்தப்பட்ட கடனாளிகளின் கவனம் வரவேற்கப்படுகிறது.

அசையா சொத்துக்களின் விவரம் - உரிமையாளர் பெயர் : திரு.S.ராமர். கேரள மாநிலம், இடுக்கி மாவட்டம், உடும்பன்சோல தாலுகா, பண்டாரவகபாட்டம் இனம், பைசன்வேலி T.P.எண்.228 கிராமம், சர்வே எண்.141/1-2, இதில் 01.0563 ஹெக்டேர் ஏலக்காய் தோட்ட சொத்தின் நான்கு மால் : வடக்கே-சதீஷிற்கு சொந்தமான நிலம், தெற்கே-லெக்ஷ்மணனுக்கு சொந்தமான நிலம், கிழக்கே-வேலாயுதம் நிலம், மேற்கே-கொண்டாரங்கி செட்டியார் தோட்டம் & மிளகுக் கொடி தோட்டம். மொத்தம் 2.60 ஏக்கர் சொத்து.

நாள் : 06.03.2024 அங்கீகாரம் பெற்ற அதிகாரி
இடம் : மதுரை கனரா வங்கி

மாநகர் போக்குவரத்துக் கழகம் (சென்னை) வரையறுக்கப்பட்டது
பல்லவன் இல்லம், அண்ணா சாலை, சென்னை - 600 002.
ஒப்பந்தப்புள்ளி அறிவிப்பு

ஒப்பந்தப்புள்ளிகள் தெர்மல் பேப்பர் ரோல் கொள்முதல் செய்வதற்கு தகுதி வாய்ந்த ஆவண அத்தாட்சி சமர்ப்பிக்கும் ஒப்பந்ததாரர்களிடமிருந்து ஒப்பந்தப்புள்ளிகள் அரசாங்க மின் கொள்முதல் இணையதளத்திலிருந்து (https:tntenders.gov.in/nicgep/app) ஆவணம் சான்றுகளை சமர்ப்பிக்க வேண்டிய மேலாண் இயக்குநர் அவர்களால் வரவேற்கப்படுகின்றன.

ஒப்பந்தப்புள்ளியின் விவரம்	ஒப்பந்தப்புள்ளியின் முன்வைப்புத் தொகை
மின் கொள்முதல் இணையதளத்தின் மூலமாக POS இயந்திரங்களுக்கு பொருத்தமான 55 GSM வெள்ளை தெர்மல் பேப்பர் ரோல்களுக்கான கொள்முதல்	ரூ.6,56,300/-

ஒப்பந்தப்புள்ளிகள் சமர்ப்பிக்க இறுதி நாள் மற்றும் நேரம் : 15.04.2024 பிற்பகல் 02.30 மணி வரை
ஒப்பந்தப்புள்ளி திறக்கப்படும் நாள் : 15.04.2024 பிற்பகல் 03.00 மணிக்கு.
முன்வைப்புத் தொகை மற்றும் அனைத்து ஒப்பந்தப்புள்ளி தொடர்பான விவரங்கள் அரசு மின் கொள்முதல் இணையதளத்தில் (https://tntenders.gov.in/nicgep/app) தெரிந்து கொள்ளலாம். ஒப்பந்தப்புள்ளியில் ஏதேனும் மாற்றங்கள் (ஏதேனும் இருந்தால்) மேற்குறிப்பிட்ட இணையதளத்தில் பதிவேற்றப்படும். மேலும் ஒப்பந்ததாரர்கள் மேற்கண்ட இணையதளத்தை அவ்வப்போது பார்த்துக் கொள்ளலாம்.

செ.ம.தொ.இ/1471/ ஒப்பந்தப்புள்ளி / 2024 மேலாண் இயக்குநர்

தமிழ்நாடு அரசு
நிதித் துறை, சென்னை -9

தமிழ்நாடு அரசின் 30 ஆண்டுகால பிணையப் பத்திரங்கள் மற்றும் மறுவெளியீட்டின் வாயிலாக 6.83 சதவீத தமிழ்நாடு மாநில வளர்ச்சிக் கடன் 2031 ஏலத்தின் மூலம் விற்பனை செய்தல்.

1. தமிழ்நாடு அரசு மொத்தம் ரூ.4000 கோடி மதிப்புள்ள, 30 ஆண்டுக்காலப் பிணையப் பத்திரங்கள் ரூ.2000 கோடி மற்றும் மறுவெளியீட்டின் வாயிலாக ரூ.2000 கோடி மதிப்புள்ள 6.83 சதவீத தமிழ்நாடு மாநில வளர்ச்சிக் கடன் 2031 ஏலத்தின் மூலம் விற்பனை செய்ய முன்வந்துள்ளது. இந்தப் பிணையப் பத்திரங்கள், குறைந்தபட்சம் ரூ.10,000/-க்கும் அதன் பின்னர் ரூ.10,000/-ன் மடங்குகளிலும் ஏலம் விடப்படும். இந்திய ரிசர்வ் வங்கியின் மும்பை (கோட்டை) அலுவலகம் மார்ச் 12, 2024 அன்று இந்த ஏலத்தை நடத்தும்.
2. மாநில அரசின் பிணையப் பத்திரங்களை ஏலம் விடுவதற்கான பொது அறிவிக்கையின் (இணைப்பு-II)ன் திருத்தியமைக்கப்பட்ட போட்டியற்ற ஏலம் கேட்பு வசதி திட்டத்தின்படி (Revised Scheme for Non-Competitive Bidding Facility) விற்பனைக்காக அறிவிக்கப்பட்டுள்ள அந்த பிணையப் பத்திரங்களில், தகுதியுள்ள தனி நபர்கள் மற்றும் நிறுவனங்களுக்கு, ஒரு ஏலக் கேட்பிற்கு உச்சவரம்பாக அறிவிக்கப்பட்ட தொகையில் ஒரு சதவீதம் என்பதற்கு உட்பட்டு 10 சதவீதம் வரை ஒதுக்கீடு செய்யப்படும். இத்திட்டத்தின் கீழ் ஒரு முதலீட்டாளர் ஒரு ஏலக் கேட்பினை மட்டுமே வங்கி அல்லது முதன்மைத் தரகர் (Primary Dealer) மூலமாக சமர்ப்பிக்கலாம்.
3. ஆர்வமுள்ளவர்கள், ஏலக் கேட்பினை இந்திய ரிசர்வ் வங்கியின் ஒருங்கிணைந்த வங்கி சேவை முறையில் (Reserve Bank of India Core Banking Solution (E-Kuber) System) மின்னணு படிவத்தில் (electronic format) மார்ச் 12, 2024 அன்று கீழ்க்குறிப்பிட்டுள்ள முறையில் சமர்ப்பிக்கலாம்:
அ) போட்டி ஏலக் கேட்புகள் மின்னணு வாயிலாக இந்திய ரிசர்வ் வங்கியின் ஒருங்கிணைந்த வங்கி சேவை முறையில் முற்பகல் 10.30 மணியிலிருந்து 11.30 மணிக்குள் சமர்பிக்கப்பட வேண்டும்.
ஆ) போட்டியற்ற ஏலக் கேட்புகள் மின்னணு வாயிலாக இந்திய ரிசர்வ் வங்கியின் ஒருங்கிணைந்த வங்கி சேவை முறையில் முற்பகல் 10.30 மணியிலிருந்து 11.00 மணிக்குள் சமர்பிக்கப்பட வேண்டும்.
4. ஏலம் கேட்பவர் ஆண்டொன்றுக்கு எதிர்பார்க்கக் கூடிய வட்டி விகிதத்தினை இரண்டு தசம ஸ்தானத்தில் தெரியப்படுத்த வேண்டும். ஒரு முதலீட்டாளர் வெவ்வேறு வட்டி விகிதத்தில் ஒன்றுக்கு மேற்பட்ட போட்டி ஏலக் கேட்பினை மின்னணு படிவத்தில் இந்திய ரிசர்வ் வங்கியின் ஒருங்கிணைந்த வங்கி சேவை முறையில் (Reserve Bank of India Core Banking Solution (E-Kuber) System) சமர்ப்பிக்கலாம். இருப்பினும், ஒரு நபர் கோரும் மொத்த ஏலக் கேட்புகள் அறிவிக்கப்பட்ட தொகைக்கு மேலாக செல்லக்கூடாது.
5. ஏலத்தின் முடிவுகள் மார்ச் 12, 2024 அன்று இந்திய ரிசர்வ் வங்கியின் இணைய தளத்தில் வெளியிடப்படும். ஏலம் கிடைக்கப் பெற்றவர்கள், தங்களது ஏலங்களில் தெரிவிக்கப்பட்ட பிணையப் பத்திரங்களுக்கான விலையை இந்திய ரிசர்வ் வங்கி மும்பை (கோட்டை) அல்லது சென்னையில் செலுத்தத்தக்க வகையிலான வங்கியாளர் காசோலை (Bankers' Cheque) அல்லது கேட்போலையை (Demand Draft) மார்ச் 13, 2024, அன்று வங்கிப்பணி நேரம் முடிவதற்குள் சமர்ப்பிக்க வேண்டும்.
6. தமிழ்நாடு அரசின் 30 ஆண்டுகால பிணையப் பத்திரங்களுக்கு ஏலத்தில் இந்திய ரிசர்வ் வங்கியால் தீர்மானிக்கப்படக் கூடிய வட்டி வீதத்தில் 6 மாதத்திற்கு ஒரு முறை செப்டம்பர் 12 மற்றும் மார்ச் 12 ஆகிய தேதிகளில் வழங்கப்படும். தமிழ்நாடு மாநில வளர்ச்சிக் கடன் 2031, மறுவெளியீடு பிணையப் பத்திரங்களுக்கு முறையே ஆண்டிற்கு 6.83 சதவீத வட்டி 6 மாதத்திற்கு ஒரு முறை ஜூன் 15 மற்றும் டிசம்பர் 15 ஆகிய தேதிகளில் வழங்கப்படும். இந்தப் பிணையப் பத்திரங்கள் அரசு பிணையப் பத்திரங்கள் சட்டம், 2006 (Government Securities Act, 2006) மற்றும் அரசு பிணையப் பத்திரங்கள் ஒழுங்குமுறை விதிகள், 2007 (Government Securities Regulations, 2007) ஆகியவற்றின்படி நிர்வகிக்கப்படும்.
7. இந்த பிணையப் பத்திரங்கள் மாற்றிக் கொடுக்கத் தக்க (Ready Forward Facility) தகுதியுடையதாகும்.
8. மற்ற விவரங்களுக்கு, தமிழ்நாடு அரசின் மார்ச் 07, 2024, நாளிட்ட பிரத்யேக அறிவிக்கை எண். 706(L)/W&M-II/2024 மற்றும் 707(L)/W&M-II/2024 - ஐக் காண்க.

த. உதயச்சந்திரன்
அரசு முதன்மை செயலாளர்
நிதித் துறை, சென்னை- 09.

செ.ம.தொ.இ./ 363 /வரைகலை/2024

திருக்கழுக்குன்றம் சிறப்பு நிலை பேரூராட்சி
செங்கல்பட்டு மாவட்டம்

ந.க.எண்.752/2022 நாள். 05.03.2024

1998 ஆம் ஆண்டு தமிழ்நாடு ஒளிவுமறைவற்ற ஒப்பந்தப்புள்ளிகள் சட்டம் (தமிழ்நாடு சட்டம் 43/1998) கீழ் அறிவிக்கப்படும் ஒப்பந்தப்புள்ளி அறிவிக்கை (Two Cover Sysstem)

செங்கல்பட்டு மாவட்டம், திருக்கழுக்குன்றம் சிறப்புநிலை பேரூராட்சிக்குட்பட்ட பகுதிகளில் 2022-2023ம் ஆண்டின் தூய்மை இந்தியா திட்டம் 2.0-ன் கீழ் பின்வரும் பணிகளை மேற்கொள்ள 11.03.2024 திங்கட்கிழமையன்று பிற்பகல் 3.00 மணி வரை கீழ்காணும் இணையதளம் வாயிலாக மட்டுமே பெற்றுக் கொள்ளப்படும். பணிக்கான முன் வைப்புத் தொகையினை பணி மதிப்பீட்டுத் தொகையில் 1 சதவீதம் இணையதளம் வழியாக செலுத்தப்பட வேண்டும்.

மேலும், ஒப்பந்தப்புள்ளிகள் பெறப்பட்ட அன்றைய தினமே பிற்பகல் 3.30 மணியளவில் திறக்கப்படும். பணி சம்மந்தப்பட்ட ஒப்பந்தப்படிவங்களை 11.